# ஆசிரியர் - அரசு ஊழியர்கள் இழந்த சலுகைகளை மீட்டுத் தந்தது திராவிட மாடல் ஆட்சி!

## பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலுரை...

3–ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்றைக்கு தவறவிட்டேன் மக்கள் மன்றத்தில்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சட்டமன்றத்தில் பதிய வைக்க வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செய்யக்கூடிய முதலமைச்சராகத் திகழ்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

நேற்று உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் அவர்கள், அரசு ஊழியர்கள் பற்றியும், ஆசிரியர்கள் பற்றியும் பேசினார்கள். பொதுவாக, இந்தச் சமுதாயத்தில் அரசு ஊழியர்களைப் பற்றி குறிப்பாக ஆசிரியர்களைப் பற்றி பேசும்போது, சிலபேர் அவர்களுடைய பலம் தெரியாமல் பேசிவிடுகிறார்கள். அது வேதனையாக இருக்கின்றது. அவர்கள் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் தெரியுமா? என்று மிகவும் எளிதாகப் பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள். அதை முழுமையாக, ஒரு சமூகத்தினுடைய பலம் என்பது எங்களுடைய அரசு ஊழியர்கள் என்பதை உணர்ந்தவர் எங்களுடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஆர்ப்பாட்டம், போராட்டம் நடைபெற்றாலும், பொதுச் சமூகத்தை அவர்களுக்கு எதிராக உடனடியாக திருப்பிவிட்டு, அவர்களைக் கொச்சைப்படுத்துவதுபோன்று, அவர்கள் இவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள், என்ன கேடு வந்தது? எதற்காக இவற்றையெல்லாம் செய்கிறார்கள் என்று சொல்லும்போது வேதனையாக இருக்கின்றது.

ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். ஆசிரியர் பெருமக்களாக இருந்தாலும் சரி, எங்களுடைய மருத்துவர்கள், செவிலியர்களாக இருந்தாலும் சரி, எங்களுடைய போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ஓட்டுநர்களாக இருந்தாலும் சரி இவர்களுடைய ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாம் முடிந்த பிறகு, அதே teacher-யிடம் சென்று, பிள்ளையை அனுப்பி, எப்படியாவது பிள்ளையைப் படிக்க வைத்துவிடுங்கள்; மருத்துவராக ஆக்கிவிடுங்கள்; Engineer ஆக்கிவிடுங்கள் என்று சொல்கிறீர்கள். அதே டாக்டரிடமும், செவிலியரிடமும் சென்றுதான் எப்படியாவது உயிரைக் காப்பாற்றுங்கள் என்று சொல்கிறீர்கள். பேரிடர் காலம் என்று வரும்போது, எந்த வண்டி ஓடியது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், எங்களுடைய அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் ஓட்டுநர்கள் நேரம் காலம் பார்க்காமல் அந்த வண்டியை ஓட்டி, ஓட்டி பயன்படுத்தினார்கள் என்று சொல்கிறபோது (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பலத்தை உணர்ந்தவர் எங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அரசு ஊழியர்கள் என்று சொன்னால், முதன் முதலாக ஏன் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில், குடும்ப பாதுகாப்புத் திட்டம் என்று கொண்டு வந்ததே அவர்தான். அரசு ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால், கருணை அடிப்படையில் வேலை தருகிறேன் என்று சொன்னவரே கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு ஊழியர்களாக இருந்தாலும், ஆசிரியராக இருந்தாலும், ஒவ்வொரு வாரிசுகளுக்கு health card கொடுக்க வேண்டுமென்று சொன்னவரே கலைஞர்தான். ESMA, TESMA என்று 2001-2006-ல் கொண்டு வந்து 1,74,000 பேரை, ஒரே கையெழுத்தில் வெளியில் அனுப்பினீர்களே, அவர்களை மீண்டும் 2006-2011-ல் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான், அரசு ஊழியர்கள் இழந்த அந்தச் சலுகைகளை மீட்டு தந்தது மட்டுமல்லாமல், மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டார். ஆக, இப்படி ஒவ்வொன்றையும் இன்றைக்கு செய்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் என்பதற்காக சொல்கிறேன். 10 வருடங்கள் நீ வேலை செய்தாயா, உனக்கு தேர்வு நிலை; 20 வருடங்கள் ஆகிவிட்டதா, உனக்கு சிறப்பு நிலை ஊதியம், இப்படி ஒவ்வொன்றையும் பார்த்து, பார்த்து செய்யக்கூடியவர் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்பது உங்களுக்கே தெரியும்.

இந்த ஆட்சி வந்தவுடன் எப்படி இருந்தது இந்த சமூகம்? அன்றைக்கு எல்லோரும் முகக் கவசத்தை அணிந்துகொள்ளுங்கள்; முகக் கவசத்தை அணிந்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஏன் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், ஏன் தன்னையே ஒரு தூதுவராக, அந்த முகக் கவசத்தை அணிந்துகொண்டு, முகக் கவசத்தினுடைய பயன் என்ன என்பது குறித்து ஒவ்வொரு இடத்திலும் அதற்கான விளம்பரத்தை செய்து, விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார். நாட்டு மக்களை முதலில் காப்பாற்ற வேண்டும்; பிறகு திட்டங்களைக் கொண்டு வரலாம் என்று சொன்னவர். அன்றைக்கு நிதிநிலை எப்படி இருந்தது? 9.69 சதவிகிதத்தில் இன்றைக்கு மிகப் பெரிய உயரத்தை எட்டியிருக்கிறோமே, இந்தளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நம்பிக்கை!

அதனால்தான் அன்றைக்கு முகக் கவசமும், மு.க. வம்சம்தான் நம்முடைய உயிரை காப்பாற்றியது என்று பொது மக்கள் சொல்கிற அளவிற்கு அதை செய்து காட்டியவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இவற்றையெல்லாம் கடந்து, பணம் நிறைய இருந்தால், அதனை வாரி வழங்கக்கூடிய வள்ளல் sir. எங்களுடைய முதலமைச்சர் அவர்கள். எல்லோரும் வாரி வழங்க வேண்டுமென்று நினைக்கக்கூடிய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். அரசு ஊழியர்களோ அல்லது ஆசிரியர்களை பற்றி நீங்கள் சொல்லும்போது, பெற்ற பிள்ளையைத் தூக்கி கொஞ்சும்போதும், நெஞ்சில் எட்டி உதைத்தால், தூக்கி போட்டுவிடமாட்டோம்; நம் பிள்ளையை நாம் தான் அரவணைத்துக்கொள்ள வேண்டும். பல நேரங்களில் அவர்கள் விமர்சனங்கள் செய்தாலும் சரி, எங்களுடைய ஆசிரியர்களுக்கும், எங்களுடைய அரசு ஊழியர்களுக்கும் நாங்கள் செய்யாமல், வேறு யார் செய்ய போகிறார்கள். இந்த நம்பிக்கை இன்றைக்கும் அவர்களுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துறைச் சார்ந்த இன்றைக்கு பல்வேறு, குறிப்பாக இங்கே தொடக்கக் கல்வி என்று வருகிற போது நான் சொன்னேன். 1,56,290 பேர் இன்றைக்கு புதிதாக enrolment நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று நாங்கள் சொன்னோம். இதுமட்டுமல்ல, 4,552 பள்ளிக் கூடங்களைச் சார்ந்த தலைமையாசிரியர்கள் அமைச்சருக்கே 100 open challenge கொடுக்கிறார்கள். எங்கள் school-க்கு வாருங்கள்; எங்களுடைய பிள்ளைகளை நீங்கள் பரிசோதிக்கலாம் sir; நாங்கள் எந்தளவிற்கு தமிழ் கற்றுத் தருகிறோம். எந்தளவிற்கு ஆங்கிலம் கற்றுத் தருகிறோம்; எந்தளவிற்கு கணக்கு கற்றுக் கொடுக்கிறோம் என்பதை வந்து பாருங்கள் sir என்று சொல்லி, கிட்டத்தட்ட 80,398 மாணவச் செல்வங்களுக்கு assessment செய்கின்ற இடத்தில், இன்றைக்கு அவ்வளவு உறுதியோடு இருக்கிறார்கள் என்பதற்காக இதனை நான் சொல்கிறேன்.

அதே மாதிரி எங்களுடைய school education என்று வரும்போது, ஏறத்தாழ எங்களுடைய துணை முதலமைச்சர் அவர்கள் 3 சதவிகித sports quota-வில் எங்கள் துறைக்கு மட்டும் பார்த்தோமென்றால், 9 பிள்ளைகள் இன்றைக்கு Junior Assistants ஆகவும், 11 பிள்ளைகள் Assistants ஆக சேர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

### மாணவர்களின் கல்விச் சுற்றுலா!

இதுமட்டுமல்ல, 323 பேரை வெளிநாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றோம். அதற்கென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாயை நிதியொதுக்கீடு செய்கிறார். இந்த நிதியொதுக்கீடு செய்கின்ற போது, ஒரு அமைச்சராக நானும் செல்கிறேன் என்று சொல்கிறபோது, இந்த அரசாங்கம் நினைத்திருந்தால், அமைச்சருக்கான செலவை நாங்களே ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லலாம். எங்களுடைய அலுவலகத்தில் பணிபுரியக்கூடிய என்னுடைய உதவியாளர்கள் அருண், பிரகாஷ் சென்னது-Sir, இதனை நாம் apply செய்தால், அரசாங்கமே உங்களுக்கும் கட்டணத்தை தரும் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், பணம் வேண்டாம். நாம் சொந்த செலவிலேயே செல்லலாம்; எனக்கு அரசாங்கம் செய்கின்ற செலவில் கூடுதலாக ஒரு மாணவனோ, ஒரு மாணவியோ அழைத்துச் சென்றால், அதைவிட எனக்கு என்ன பெருமை என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். Jamboree, மிகப் பெரிய Scouts and Guides-க்கான ஒரு gathering. ஒட்டுமொத்தமாக இந்தியா, பல்வேறு நாடுகளைச் சார்ந்திருக்கின்ற 20,000-க்கும் மேற்பட்ட மாணவ செல்வங்கள் Scouts and Guides கலந்து கொண்டார்கள். மிகப் பெரிய Jamboree, நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் Jamboree-க்கான headquarters Scouts and Guides-க்கான headquarters-க்காக, தனியாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2641 பிள்ளைகளுக்கு சான்றிதழ் வழங்கிய துணை முதலமைச்சர்!

தனியார் பள்ளி இயக்ககம். Very first time, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் அதற்கென்று தனி Directorate-ஐ நாம் கொண்டு வந்திருக்கிறோம். Directorate-ஐ கொண்டு வந்தது மட்டுமல்ல, தனியார் பள்ளியைச் சார்ந்திருக்கின்ற மாணவ செல்வங்கள், Sports-ல் national level, international level-ல் சாதித்தார் என்றால், முதல் 3 இடத்திலிருக்கக்கூடிய 2,641 பிள்ளைகளுக்கும் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள், அதற்கான சான்றிதழ்களை அவர் வழங்கியிருக்கின்றார்கள். இப்படி private school சார்ந்திருக்கின்ற பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் 100 சதவிகிதம் கொடுத்த பள்ளிக்கூடத்திற்கும் சேர்த்து நாங்கள் அந்த சான்றிதழ்களை நாங்கள் வழங்கியிருக்கிறோம். இதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சொன்னதுபோல், தனியார் பள்ளியைச் சார்ந்திருக்கின்ற CBSE சார்ந்திருக்கின்ற கிட்டத்தட்ட 3,565 தமிழ் ஆசிரியர்களுக்கு ஒரு refreshing course, training கொடுத்திருக்கிறோம். வருடா வருடம் அதனை நாங்கள் கொடுக்கப்போகிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பெற்றோர்களை கொண்ட 7 விதமான மண்டல மாநாடு; 5-வது மண்டல மாநாடு துணை முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள் என்பது சிறப்பு. 7-வது மண்டல மாநாடு விருத்தாசலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏறத்தாழ ஒன்றரை இலட்சம்பெற்றோர்கள் முன்பாக நின்று அவர் பேசினார்.

பெற்றோர்கள் மாநாட்டில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராகவே, துணை முதலமைச்சராகவோ நாங்கள் பிள்ளைகளுக்கு தாம்பூலத்தில் சீர் எடுத்துக்கொண்டு வரலாம். ஆனால், எழுதி வைத்துக்கொள்ளுங்கள் நம்முடைய வரலாற்றில் ஒரு முதலமைச்சர் கையில் சீர் கொண்டு வந்து, என் பிள்ளைகளுக்காக நான் கொண்டு வருகிறேன் என்று சொன்னார் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த தாம்பூலத்தில் என்னென்ன புத்தகம் இருந்தது தெரியுமா, ஒரு தமிழ் புத்தகம், ஒரு ஆங்கில புத்தகம், ஒரு கணித புத்தகம், ஒரு அறிவியல் புத்தகம், robotics சார்ந்து ஒரு robot. ஆக, இன்றைக்கு அடுத்தகட்டத்திற்கு நாங்கள் எதையெல்லாம் நகர்த்தப்போகிறோம் என்று ஒரு தாம்பூலத்தில் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் காட்டி விட்டார் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். ஏறத்தாழ 1950 காலத்திலிருந்து யார் யார் எல்லாம் நமக்காக நிதியுதவியோ, அல்லது நிலமோ வழங்கியிருக்கிறார்களோ, தோராயமாக எடுத்த கணக்கு மட்டும் பார்த்தீர்களென்றால் 3,272.16 இலட்சம் கோடி ஒவ்வொருவரும் வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்லும்போது அவர்களுக்கும் அந்த மாநாட்டிலே நாங்கள் கௌரவப்படுத்தியிருக்கிறோம் என்பதை நான் சொல்கிறேன்.

Model School, அத்திபூத்தாற் போன்று ஒரு மாணவன் சேர்ந்தான் 2021-ல். premium institutions-ல் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி இன்று எவ்வளவு பிள்ளைகள் தெரியுமா பூத்திருக்கிறது. 961 பிள்ளைகள் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் premium institutions -ல் IIT ஆக இருந்தாலும் சரி, IIM ஆக இருந்தாலும் சரி, NIFT ஆக இருந்தாலும் சரி, NIFTEM ஆக இருந்தாலும் சரி, National Law University ஆக இருந்தாலும் சரி எல்லாவற்றிலும் எங்களுடைய பிள்ளைகள் சென்று சேர்ந்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல பேரவைத் தலைவர் அவர்களே, 16 பிள்ளைகள் full scholarship -ல் வெளிநாடுகளில் இருக்கிற University-ல் சேர்ந்திருக்கிறார்கள். அப்படி வெளிநாட்டில் சேர்கின்ற பிள்ளைகளுக்கு முதல் விமான செலவு நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். அதற்கென்று நாங்கள் 6.23 கோடி ஒதுக்கீடு செய்திருக்கின்றோம் (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, இப்படி அதபோன்று centernary நூற்றாண்டை கொண்டாடுகிற அரசுப் பள்ளிகள் 2,211 பள்ளிகள். இன்றைக்கு 883 பள்ளிக் குழந்தைகளுக்கு முன்னாள் மாணவர்கள் மூலமாக நாங்கள் விழாக்களை எடுத்திருக்கிறோம். இதுமட்டுமல்ல அனைவருக்கும் IITM என்று சொன்னேன் அல்லவா, அந்த அனைவருக்கும் IITM-ல் 363 பிள்ளைகள் இன்றைக்கு தொடர்ந்து பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

### குரூப் 1, குரூப் 2-இல் 1293 பேர் வெற்றி!

library என்று வரும்போது, இங்கு ஒட்டுமொத்தமாக முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் library, கோயம்புத்தூரில் தந்தை பெரியார், என்னுடைய திருச்சி மாவட்டத்தில் காமராஜ் பெயரில் library எல்லாம் வரப்போகின்றது. பொது நூலகங்கள் சார்ந்து பயன் பெற்றிருக்கின்ற, இன்றைக்கு நாம் சொல்கிறோம் நான் முதல்வன் திட்டத்தில் கிட்டத்தட்ட 50 பேர் இன்று select ஆகியிருக்கிறார்கள் 134 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னோம். பொது நூலகங்கள் சார்ந்து அந்த பொது நூலகத்தை பயன்படுத்தியதன் மூலமாக இரண்டு வருட கணக்காகதான் சொல்கிறேன். இரண்டு வருட கணக்கைதான் சொல்கிறேன். அந்த பொதுநூலகங்களைப் பயன்படுத்தி TNPSC-யில் Group-I, Group-II, Group-IV-ல் தேர்வு செய்யப்பட்ட அந்த இளைய சமுதாயம் மட்டும் 1,293 பேர் இன்றைக்கு அந்த பொது நூலகத்தை பயன்படுத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த ஒவ்வொரு திட்டத்தினுடைய impact எங்கு வந்து நிற்கிறது பாருங்கள். அவர் ஒரு திட்டம் கொண்டுவந்தால் அதற்கான success rate எங்கே வந்துநிற்கிறது என்பதற்காக நான் இதை சொல்கிறேன். Library-ல் நூல் கொள்முதல் transparent ஆக இருக்க வேண்டுமென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொது நிகழ்ச்சியில் சொன்னார்கள். இன்றைக்கு அதற்காக தனியாக ஒரு portal கொடுத்து அந்த portal-ல் publishers யாராக இருந்தாலும் சரி அல்லது distributors யாராக இருந்தாலும் சரி புத்தகம் சார்ந்து பதிவு செய்யுங்கள். பதிவு செய்தால் உடனே அவர்கள் எல்லோருக்கும் அந்த புத்தகத்தை கொடுத்துவிட மாட்டோம். உடனே அதற்கான order-ஐ கொடுத்துவிட மாட்டோம். பதிவு செய்தவுடன் அதற்கு என்று தனியாக ஒரு குழு இருக்கிறது. அந்த குழு இந்த புத்தகங்கள் எல்லாம் ஏற்கக்கூடியதுதான, இதெல்லாம் இந்த சமுதாயத்திற்கு பயன்படக்கூடியதுதான என்று பார்க்கும். அது பார்த்ததற்கு பிறகு அது சார்ந்து விலைகள் negotiations நடக்கும். நீங்கள் இவ்வளவு விலை கொடுத்தால் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம், கொள்முதல் செய்து கொள்கிறோம் என்று சொல்வோம் நாங்கள்.

## ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தையும் இன்றைக்கு அறிவு சார்ந்த சமுதாயமாக மாற்றிக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்!

அப்படி 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் அதில் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 8,630 புத்தகங்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் negotiations basis-ல் 7,106 புத்தகங்கள் நாங்கள் தேர்வு செய்திருக்கிறோம். பத்து, பத்து மாவட்டமாக அந்த பத்து மாவட்டத்தைச் சேர்ந்த, பொது நூலகத்தில் இந்த புத்தகங்களை எல்லாம் நாங்கள் விநியோகம் செய்ய இருக்கிறோம். அந்தப் பணி என்பது மே மாதத்திற்குள்ளாக முடிவடைய இருக்கின்றது.

### 488 புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறோம்!

Tamil Nadu Text Book and Educational Services Corporation. எங்களுடைய Textbook Corporation தலைவர் அண்ணன் லியோனி அவர்களுடைய தலைமையில் இன்றைக்கு பல்வேறு புத்தகங்கள், திசைதோறும் திராவிடமாக இருந்தாலும் சரி, முத்தமிழறிஞர் கலைஞர் மொழிபெயர்ப்பு திட்டமாக இருந்தாலும் சரி, கிட்டத்தட்ட 488 புத்தகங்கள் இதுவரைக்கும் நாம் release செய்திருக்கிறோம். அதில் சமீபத்தில் Indo-European வேர்ச்சொற்களை கண்டுபிடிப்பதற்கான Oxford பல்கலைக்கழகத்தின் publishers மூலமாக ஒரு புத்தகம். அது மிகவும் முக்கியமான புத்தகம். 12 தொகுதிகளாக நாங்கள் வெளியிடப்போகிறோம். தற்போது first தொகுதி நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். அதில், Indo-European என்று வரும்போது ஒட்டுமொத்தமாக Asian and European countries-ல் இருக்கக்கூடிய மொழிகளின் எண்ணிக்கை 6,000 மொழிகள் இருக்கின்றது. அதில் சில common ஆன வேர்ச்சொற்களுக்காக நாம் எடுக்கிறோம். அந்த வேர்ச்சொற்களை பார்த்தீர்களென்றால் கிட்டத்தட்ட ஒரு 461 வேர்ச்சொற்கள் இருக்கின்றது. அதில் 300 வேர்ச்சொற்கள். Proto-Indo-European rules (PIE rules) என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு நம்முடைய தமிழில் வருகின்ற அரசன் என்கின்ற ஒரு பெயர் இருக்கிறது. Greek-லும் English-லும் அது எப்படி வருகிறது என்று பார்த்தீர்களென்றால் "ஆர்ஷன்" என்று வருகிறது. French மொழியில் "ஆர்க்ச்சி" என்று வருகிறது. Latin மொழியில் "ஆர்க்ச்சியஸ்" என்று வருகிறது. அரசன் என்பது தொல்காப்பியத்தில் அரசு என்று பயன்படுத்தியிருக்கிறோம். வள்ளுவத்திலும் அரசு என்று நாம் பயன்படுத்தியிருக்கிறோம். அது எப்படி வழிவழியாக ஒவ்வொரு பக்கமாக செல்கிறது. சமஸ்கிருதத்தில் அகரத்தை நீக்கி ராஜு என்று வருகிறது. அரசு என்று இல்லாமல் ராசு என்று வருகிறது. அது மேலை மொழிகளில் வரும்போது regional, regulate என்று வரும்.

### 5370 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை கண்டுபிடித்த தமிழன்!

இவையனைத்திற்கும் வேர்ச்சொல் என்னவென்று பார்த்தீர்களென்றால், தமிழ் சொற்கள் தான் இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'அரசன்' என்ற சொல் மட்டுமல்ல; 'இரும்பு' என்ற சொல் கருப்பு நிறத்தைக் குறிக்கின்றது. இல்-ர்-ர்-இரு என்று இரும்பு என்ற சொல் உருவாகின்றது. எனவே, இரும்பு என்ற சொல்லானது ஒவ்வொரு language-லும் iren, ieros, ieren, ஆங்கிலத்தில் iron என்று வருகிறது. இந்தா வேர்ச்சொற்கள் எங்கிருந்து வருகின்றது என்று பார்த்தால் தமிழிலிருந்துதான் வருகிறது. 5,370 ஆண்டுகளுக்கு முன்பாகவே இரும்பை கண்டுபிடித்தவன் தமிழன் என்று சொன்னது மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய துணைக் கண்டம் எங்கிருந்து தொடங்கப்பட்டது என்று சொன்னால் மட்டுமல்ல; Indo-European எங்கிருந்து தொடங்கப்பட்டது என்று சொன்னால், எங்களுடைய தமிழ் மண்ணிலிருந்து என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நாங்கள் அதைப் பறைசாற்றியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புத்தகம் என்பது மிகவும் முக்கியமான புத்தகம். இன்னும் வருங்காலத்தில் பல்வேறு மொழிகளுடைய சொற்களுக்கு வேர்ச்சொல்லாக இருப்பது தமிழ் என்பதை உணர்த்தக்கூடிய ஒரு தருணமாக இதை நான் பார்க்கின்றேன்.

SCERT-ஐப் பொறுத்தவரைக்கும், Archaeology சார்ந்து நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், பல இடங்களில் Archaeology சார்ந்த பல exhibition-ஐ முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துக்களோடு இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது வெறுமனே ஒரு கண்காட்சியாக இருந்தால் மட்டும் போதுமா? இதை நம்முடைய பள்ளிக்கூடங்களை சார்ந்திருக்கின்ற மாணவ சமுதாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு வருடமும் ஆயிரம் teachers-ஐ train செய்து, இதுவரைக்கும் 70,000 மாணவர்களிடம் இதை நாங்கள் கொண்டு சென்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்த நான்விரும்புகின்றேன். (மேசையைத்தட்டும்ஒலி)

### 20 இலட்சம் பேருக்கு எழுத படிக்க சொல்லிக் கொடுத்திருக்கிறோம்!

Non formal Education. 15 வயதிற்கு மேற்பட்ட வயது வந்தவர்கள் பள்ளிக்கூடத்திற்கு செல்வதற்கு வாய்ப்பே இல்லாதவர்களுக்காக-- literacy rate-ஐ நாம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அதில் கிட்டத்தட்ட 39.2 கோடி ரூபாயானது முதலீடு செய்யப்பட்டு, இதுவரைக்கும் 20 இலட்சம் பேருக்கு எழுதப் படிக்க நாங்கள் சொல்லி கொடுத்திருக்கின்றோம். மிக விரைவாக literacy rate-ஐ 100 சதவிகிதம் எட்டக்கூடிய மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு மாறும் என்பதற்காக இதை நான் சொல்கின்றேன். இப்படி ஒவ்வொன்றையும் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துக்களின்படி--teachers recruitment-ஐப் பொறுத்தவரைக்கும், இதுவரைக்கும் எத்தனை teachers-ஐ நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றோம் என்பதையும், இனி வருங்காலங்களில் எத்தனை teachers-ஐ தேர்ந்தெடுக்க இருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் நேற்றையதினம் முழுமையாக சொல்லியிருக்கிறேன்.

2021 ஆம் ஆண்டில் ஒரு ஐந்து விதமான parameters குறித்து நான் சொன்னேன். ஒன்று Access பற்றி நான் சொன்னேன்; இன்னொன்று Equity பற்றி சொன்னேன்; இன்னொன்று infrastructure பற்றி சொன்னேன்; இன்னொன்று Governance process பற்றி சொன்னேன்; இன்னொன்று Outcome பற்றி பேசினேன். Access பொறுத்தவரைக்கும், ஒரு கிலோ மீட்டருக்குள் ஒரு தொடக்கப் பள்ளி, மூன்று கிலோ மீட்டருக்குள் ஒரு நடுநிலைப் பள்ளி, ஐந்து கிலோ மீட்டருக்குள் ஒரு High School, ஏழு கிலோ மீட்டருக்குள் ஒரு Higher Secondary School என்ற வகையில் almost அனைத்துப் பகுதியிலும் இது கொண்டுவரப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், எங்கெங்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் தேவையென்று சொல்லியிருக்கின்றார்களோ அதையும் நாங்கள் கருத்தில் வைத்திருக்கிறோம். இது Access.

Equity-ஐப் பொறுத்தவரைக்கும் பாலின சமத்துவம். இன்றைக்கு கிட்டத்தட்ட 66 இலட்சம் மாணவர்களாக ஆண்களும், 63 இலட்சம் மாணவர்களாக பெண்களும் படிக்கக்கூடிய அளவில் உள்ளது. கிட்டத்தட்ட அதையும் நாம் கொண்டு வந்துள்ளோம். Infrastructure குறித்து நேற்றையதினமே சொன்னேன். பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, எத்தனை வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதையும் நான் சொன்னேன்.

Governance Process என்று சொல்லும் போது, எப்படி transparent ஆக ஓர் அரசாங்கம் இருக்கின்றதோ, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், நா. முருகானந்தம், அவர்கள் CS ஆக இருக்கிறார்கள். எங்களுடைய துறையைப் பொறுத்தவரைக்கும், எங்கள் துறையைச் சார்ந்திருக்கின்ற S. சந்திரமோகன், அவர்கள் இருக்கிறார்கள். Finance Secretary T. உதயச்சந்திரன், அவர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய துறையைப் பொறுத்தவரைக்கான officers-களான திருமதி ஆர்த்தி, அவர்கள், சங்கர், அவர்கள், திருமதி ஜெயந்தி, அவர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். எங்களுடைய துறையில் இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், CEO, DEO, BEO, HMs என்ற ஒரு circle-லே இருக்கிறது. இன்றைக்கு நான் பேசுகிறேன் என்று சொன்னால், இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முதல்வரின் ஏழு விதமான உறுதிமொழி!

அடுத்ததாக outcome. இவ்வளவு செய்தும், outcome என்ன வந்திருக்கிறது என்று சொல்லும்போது-- தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏழு விதமான உறுதிமொழிகளை திருச்சி மாவட்டத்தில் சொல்லிதான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். அதில் நான்காவது உறுதிமொழியாக இருக்கின்ற, கல்வி சார்ந்த உறுதிமொழியினை பார்த்தீர்களென்றால் இதனுடைய இலக்கானது பத்து ஆண்டுகள். ஐந்து ஆண்டு இலக்குகளில் பத்து ஆண்டு இலக்காக அந்த ஏழு உறுதிமொழியினை நாங்கள் சொல்லியிருக்கிறோம். நம்முடைய உள்நாட்டு உற்பத்தியைச் சார்ந்து, நம்முடைய budget-க்கு மட்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கல்வித் துறைக்கு மூன்று மடங்காக நிதி ஒதுக்கீடு செய்வோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு வரைக்கும் 1.6 சதவிகிதம்; on the whole பார்த்தால் 2 சதவிகிதம் என்று சொல்லலாம். இரண்டு மடங்கு என்று சொல்லலாம். பத்து ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி மூன்று மடங்காக அதனை உயர்த்திக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை அனைவருக்குமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதேமாதிரி இன்றைக்கு கற்றல் என்று வரும்போது, கற்றல் அளவில் நாம் 17-வது இடத்தில் இருக்கிறோம். 10-வது இடத்திற்குள் நாம் வந்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மே மாதத்தின் இறுதியில் NAS-யுடைய report வர விருக்கிறது. அதற்கிடையில் NITI Aayog Sustainable Development Goal-ல் தரமான கல்வி வழங்குவதில் இன்றைக்கு நான்காவது தரவரிசையில் நாம் ஏற்கனவே இருக்கிறோம்.

dropout ratio-ஐப் பொறுத்தவரைக்கும், பிள்ளைகளின் இடைநிற்றலானது 16 சதவிகிதமாக இருக்கிறது. இந்த 16 சதவிகிதத்தினை 5 சதவிகிதத்திற்குள் கொண்டு வரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். Elementary School என்று வருகின்றபோது, இடைநிற்றலே இல்லாத ஒரு மாநிலமாக இருப்பது தமிழ்நாடு என்று ஒன்றிய அரசு நம்மை பாராட்டுகின்றது. Higher secondary-ஐப் பொறுத்தவரையில் 7.7 சதவிகிதம் இடைநிற்றல் இருக்கின்றது. அதையும் நாங்கள் சரி செய்வோம். National average ஆக 14.1 சதவிகிதமாக இருக்கிறது. அதையும் நாங்கள் சிறிது, சிறிதாக குறைத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதிரியான உறுதிமொழிகளை, நாங்கள் சொல்வதற்கு தகுந்தாற்போல், இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு விஷயங்களையும் இன்றைக்கு பார்த்து, பார்த்து நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

நான் இத்தனைத் திட்டங்கள் குறித்து சொன்னேன். குறிப்பாக முக்கியமான ஒரு திட்டம். Learning Outcome-ல் SPC பற்றி சொல்கிறேன். State Planning Commission ஒரு report கொடுக்கப்படவுள்ளது. NAS ஒரு report கொடுக்கப்படவுள்ளது.

இந்த State Planning Commission உடைய report-ஐ நாங்கள் ஏன் முக்கியமானதாக பார்க்கிறோமென்றால், இந்த state planning commission உடைய report-யைத்தான் நாடாளுமன்றத்திலே நம்முடைய ஜனாதிபதி அவர்கள் படித்து காட்டியிருக்கிறார். தமிழ்நாட்டைச் சார்ந்த SPC சொல்கிறது காலை உணவுத் திட்டத்தின்மூலமாக பிள்ளைகளுக்கு நினைவாற்றல் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடத்திற்கு சரியான நேரத்திற்கு வருகிறார்கள். அவர்களால் focus செய்ய முடிகிறது என்று சொல்கிறார்கள். அதனால் அந்த SPC-க்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் எங்களுடைய பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்கள்மீது இருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் சொல்கிறேன், நல்ல விஷயத்தில் நல்லவிதமாகவே அந்த result வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ரூ.2152 கோடி பட்ஜெட்டில் ஒன்றிய அரசு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை திட்டங்களைச் சொன்னாலும் சமக்ர சிக்ஷா அபியான் திட்டம் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் இன்றைக்கு பேசுப்படுகின்ற ஒரு பொருளாக இருக்கிறது. 2,152 கோடி ரூபாய் இன்றைக்கு நமக்கு வழங்க வேண்டும். சமக்ர சிக்ஷா அபியான் ஒருகிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தினுடைய objective என்னவென்றால், ஒரு பிள்ளைக்கூட கல்வி கற்காமல் போய்விடக்கூடாதே என்பது தான் அவர்களுடைய objective ஆகும். ஆனால், அவர்கள் சொல்கிற objective-க்கு அவர்களே எப்படி எதிர்மறையாக இருக்கிறார்கள் என்பதற்கு நான் சொல்கிறேன். 'அந்த objective-வை பற்றி எல்லாம் எனக்கு கவலை கிடையாது. நான் சொல்கிற கொள்கையை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, உன்னுடைய 43 இலட்சம் மாணவர்கள் எக்கேடு கெட்டுப்போனால் எனக்கென்ன, உன்னுடைய 32 ஆயிரத்து 298 ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் எப்படிபோனால் எனக்கென்ன, நான் சொல்கிற கொள்கையை ஏற்றுக்கொள்' என்று சொல்லுகிற அந்த மனப்பான்மையில்தான் ஒன்றிய அரசு இருக்கிறது என்பதற்காக நான் சொல்கிறேன். சமக்ர சிக்ஷா அபியான் என்பது சாதாரணத் திட்டமல்ல. இன்றைக்கு நாங்கள் சொல்கிறோம் அல்லவா Hi-Tech Labs நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்; Smart Boards நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்; ITK-க்கு 660 கோடி செலவு செய்து, 95 பிள்ளைகள் அதிலே பயன் பெற்றிருக்கிறார்கள்; வாசிப்பு இயக்கத்திற்கு நாங்கள் இவ்வளவு செலவு செய்திருக்கிறோம். அதேபோன்று எண்ணும் எழுத்தும் திட்டத்திற்கு 414 கோடி ரூபாய் நாங்கள் செலவு செய்திருக்கிறோம். வரிசையாக நாங்கள் அடுக்கி, அடுக்கி சொல்லிக் கொண்டிருக்கிறோம் பார்த்தீர்களா! இதிலே முத்தாய்ப்பான ஒரு திட்டம் என்று பார்த்தீர்களென்றால் RTE. எல்லா பிள்ளைகளும் அரசுப் பள்ளிகளில்கூட சேர்க்கவேண்டும் என்று கூட இல்லை.

தனியார் பள்ளியில் என் பிள்ளையை சேர்க்கவேண்டும், நான் ஒரு weaker section. ஏன், என் பிள்ளை தனியார் பள்ளியில் படிக்கக்கூடாதா என்று நினைப்பவர்களுக்கும், 25% ஒதுக்குகிறார்கள் பார்த்தீர்களா, அது யாருடைய direction-ல், act வந்ததென்று பார்த்தீர்களென்றால் Supreme Court direction-ல் வந்த act அது. அந்த act-க்கே எதிர்மாறாக, நாங்கள் பணத்தை தரமாட்டோம் என்று சொல்லும்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் 'நீங்கள் சொல்கிற கொள்கையை நான் ஏற்றுக்கொண்டு, நான் கொடுக்க வேண்டும் என்கிற அவசியம் கிடையாது. நீங்கள் 10,000 ஆயிரம் கோடி கொடுத்தாலும் தேவையில்லை.' ஆனால் இந்த சட்டமன்றத்தில் சொல்கிறேன், 2,152 கோடி ரூபாயை ஒரு மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது, பெருமை வாய்ந்தது, எங்கள் முதலமைச்சர் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம் என்று சொன்னாலும், அந்தப் பணம் நம்முடைய பணம். இங்கிருக்கின்ற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே, பணியாற்றி கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா, அந்த பொதுமக்களுடைய பணம் அது. மீண்டும் அந்த Union Minister இடம் இந்த சட்டமன்றத்தில் நின்று சொல்கிறேன், எங்களுடைய பணத்தை தயவு செய்து கொடுத்துவிடுங்கள். இது உங்களுடைய பணமல்ல. எங்களது உழைப்பின் மூலமாக வந்த பணம் என்பதை நான் பதிவு செய்கிறேன். எங்களுக்கு 2,152 கோடி ரூபாயை நீங்கள் கொடுக்கவில்லை என்றாலும், அதை நாங்கள் பெருந்தன்மையாக ஏற்றுக்கொண்டாலும், இழப்பு இழப்பு தானே!

### பறவையும் தேனியும்!

நிதி நெருக்கடி, நிதி நெருக்கடி தானே! ஆகவே, அதைத்தான் நாங்கள் ஒன்றிய அரசிடம் நாங்கள் கேட்கிறோம். ஆனால், முதலமைச்சர் அவர்கள் எப்படி நிர்வகிக்கிறார்கள் என்று பாருங்கள். ஒரு பறவை தேனீயிடம் சென்று கேட்டதாம், தேனீயே, தேனீயே கஷ்டப்பட்டு உழைக்கிறாய். கஷ்டப்பட்டு இந்த தேனையெல்லாம் தயாரிக்கிறாய். ஆனால், கடைசியில் அதை ஒரு மனிதன் களவாடிக் கொண்டுபோகிறானே என்று உனக்கு வருத்தம் இல்லையா, என்று கேட்கும்போது தேனீ சொன்னதாம், அந்த மனிதனால் நான் தயாரித்து வைத்த தேனைத்தான் களவாட முடியும். தேன் தயாரிக்கும் என்னுடைய திறமையை அவனால் களவாட முடியாது என்று சொன்னதாம். அதே போன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமிருந்த பெற்ற அந்த நிர்வாகத் திறமையின் மூலமாக இன்றைக்கு எவ்வளவு நிதி நெருக்கடி வந்தாலும், இத்தனை திட்டங்களை யும் நிறுத்தவில்லை. Sir, அந்தத் திட்டத்தில் self-defence என்று ஒரு திட்டம் இருக்கிறது sir. ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய பெண் பிள்ளைகள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக கராத்தேவாக இருந்தாலும் சரி, ஜூடோவாக இருந்தாலும் சரி; கிட்டத்தட்ட 10 ஆயிரம் கோடி நாங்கள் செலவு செய்கிறோம். 13 இலட்சம் மாணவிகள் அதிலே பயன்பெறுகிறார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்துகிறார்கள் sir அவர்கள். ஆகவே, இது சார்ந்து எங்களுக்கான நிதியை வழங்கவேண்டுமென்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்.

Sir, in a nutshell நான் சொல்கிறேன், இந்த NEP-யைப் பொறுத்தவரையில் நான் ஒரு புத்தகம் எழுதிக்கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதை மிக விரைவிலே வெளியிட இருக்கிறார்கள். அதிலே நான் அதிகமாக சொல்லியிருக்கிறேன். ஒன்றே ஒன்றுதான், அந்த Mathematics derivation நம் எல்லோருக்கும் தெரியும். ஒரு Maths-ல் ஒரு equation-யை derive செய்கிறோம் என்று சொன்னால் 'left hand side is equal to right hand side. Hence, proved.' என்று சொல்கிறோம். So, LHS is equal to RHS என்று நாம் சொல்கிறோம். ஆனால் ஒன்றிய அரசு என்ன சொல்கிறது, LHS is equal to RHS என்பதை தூக்கி போடு; on the whole the Education should be RSS என்று சொல்கிறார்கள் பார்த்தீர்களா அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்காகத்தான் நாங்கள் மறுக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் சார்ந்து சொல்கிறார்கள் பார்த்தீர்களா, NEP என்பது வெறும் மொழி சார்ந்திருக்கிற பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டுமில்லை sir. அந்த NEP-யில் எங்களுடைய ஆசிரியர்களை வஞ்சிக்கக்கூடிய சரத்துகள் இருக்கின்றன. ஆசிரியர்களை எப்போது வேண்டுமானாலும் வேலைக்கு எடுக்கலாம்; எப்போது வேண்டுமானாலும் வேலையிலிருந்து நீக்கலாம்; தலைமை ஆசிரியர்கள் சொன்னால் மட்டும்தான் அவர்களுக்கு promotion கிடைக்கும்; அந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்கும் என்று சொல்கின்ற அளவிற்கு இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் சேர்த்துத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதை எதிர்க்கிறார் என்பதற்காகத் தான் இதையெல்லாம் நான் சொல்கிறேன்.

### 234 தொகுதிகளுக்கும் நேரடியாக சென்றேன்!

very first time ஒரு பட்ஜெட் என்று வரும்போது நிதிநிலை அறிக்கையில் என்று வரும்போது stakeholders கூப்பிட்டு வைத்து pre-budget meeting நடத்தி செய்கிறார்கள். வேளாண் பட்ஜெட் என்று வரும்போது, விவசாய சங்கங்களை எல்லாம் அழைத்து, ஒரு பட்ஜெட் போட்டு, அவர்களுடைய கருத்துக்களை சொல்கிறார்கள். Very first time, ஏன் இது மாதிரி students இடம் பேசி, நீங்கள் announcement செய்தால் என்னவென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார். அதனால் நான் ஒரு மாதத்திற்கு முன்பாக, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலிருந்து 1,500 மாணவச் செல்வங்களை வரவழைத்து, அவர்களிடம் உரையாடி, அதன்மூலமாக சில announcement நான் அறிவிக்கயிருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே 234 தொகுதிகளுக்கும் நேரடியாக நான் சென்றிருக்கின்றேன். 77 வகையான components-யை நாங்கள் inspection செய்திருக்கிறோம். அதிலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய கருத்துக்கள், நாங்கள் என்னென்ன சென்று பார்த்திருக்கிறோம் என்று எல்லாவற்றையும் தொலைபேசியில் தொடர்புக் கொண்டு நான் சொல்லிவிட்டுதான் சென்றிருக்கிறேன், including நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதற்கொண்டு எல்லோரையும் நான் தொலைபேசியில் தொடர்புக் கொண்டு, இதுமாதிரி நான் ஆய்வு செய்திருக்கிறேன்; இதெல்லாம் இருக்கிறது; இது போன்ற findings இருக்கிறது; இதையெல்லாம் சரி செய்து தருகிறேன் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்.

234 பேருக்கும் என்னென்ன கட்டடங்கள் இருக்கின்றன என்பதை ஒரு letter ஆகவே எல்லோருக்கும் நான் அனுப்பியிருக்கிறேன். அந்த 234 தொகுதிகளில் நான் பயணம் செய்யும்போது, குறிப்பாக நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் என்கிற ஒரு பகுதியில் இருக்கிற ஒன்றிய தொடக்கப் பள்ளியை என்னால் மறக்க முடியாது. அங்கு செல்லும்போது, மல்லசமுத்திரத்தில் பார்த்தோமென்றால், தொடக்கப்பள்ளி கீழே அரிஜன் காலனி என்றிருந்தது. அந்தப் பகுதியைச் சார்ந்திருக்கிற மக்கள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கில் வெற்றி பெற்ற பிறகு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் இந்தமாதிரி வந்திருக்கிறது என்று நான் சொன்னேன். உடனடியாக G.O. போடுங்கள். G.O. போட்ட பிறகு அதனுடைய copy ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு நேரடியாக அந்த school-க்குச் சென்று கறுப்பு மையை எடுத்து அந்த அரிஜன் என்கிற பெயரை அழித்துவிட்டு வா என்று மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு common G.O. ஆகவும், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் எங்கெல்லாம் இந்தமாதிரி அரிஜன், காலனி என்றிருக்கிறதோ அதைத் தூக்கி எறிகின்ற அளவிற்கு நாங்கள் செய்யவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மிகுந்த ஒரு கனத்த இதயத்தோடும், வருத்தத்தோடும் நான் சொல்கிறேன். இந்திய காலேந்திகளினுடைய அட்டகாசத்தைப் பார்த்து சிரிக்கிறான் ஹிட்லர்; நம்மையும் மிஞ்சி விட்டார்களே என்று உற்று நோக்குகிறான் முசோலினி; ஜார் மன்னன் சிரிக்கின்றான்; லூயி மன்னன் வெட்கப்படுகின்றான்; ஜனநாயகம் இரத்தம் பட்ட உடலோடு கிடக்கிறது. நாட்டினுடைய அரணாக, ஓர் அன்னையாக ஜனநாயகத்தை தன்னுடைய மடியில் கிடத்தி அதைச் சரிசெய்கிற பணியில் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புராணக் கதைகளில் வருவதைப்போல, 'ஒருசில விஷ வண்டுகள் அவருடைய தொடையில் ஒரு பக்கம் நுழைந்து மறுபக்கமாக வருகிறது. அவருக்கு இரத்தம் வருகிறது; பரவாயில்லை. விஷ வண்டுகளாக இருந்தாலும் அதுவும் தமிழ் வண்டுதானே' என்று பெருமையோடு இருக்கிறார் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள்.

ஆக, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, மரத்தை வெட்டுபவன் களைப்பாறுவதற்கு இன்னொரு மரத்தினுடைய நிழலைத்தான் தேடுகிறான். நம்மையும் இவன் ஒருநாள் வெட்டுவானே என்று அந்த மரம் நிழல் தர மறுப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் தன்னை வஞ்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, தன்னை விமர்சனம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, தனக்கு இடையூறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களுக்கெல்லாம் அன்பை மட்டுமே மீண்டும் பரிசாக அவர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அன்பு உள்ளம் அடுத்த ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு இந்த நாட்டையும், நாட்டு மக்களின் உள்ளத்தையும் ஆளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### 7வது முறையாக தி.மு.க. ஆட்சி!

அந்த அன்பு உள்ளத்தினுடைய வயது 72. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலிருக்கிற 7 என்பது, அடுத்த ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு, ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகமே ஆட்சிப் பொறுப்பில் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலிருக்கிற 2 என்பது, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்பவர் இரண்டாவது முறையாக ஆளுநர் மாளிகையை அதிர வைப்பார், நம்முடைய கொள்கை எதிரிகளைப் பதற வைப்பார் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! கொள்கை எதிரிகள் மொழியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்! இறுதியில் தர்மமே வெல்லும்! என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர்கள், பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள், பல்வேறு கேள்விகள், பல்வேறு கருத்துகள் அனைத்தையும் நான் மனதில் உள்வாங்கி இருக்கிறேன். அனைத்துக்கும் பதில் தந்திருக்கிறேன் என்கிற அந்த நம்பிக்கையில், மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மாணவச் சமுதாயம், இந்தத் தமிழ்ச் சமுதாயம், நம்முடைய தமிழ்நாடு வளர்வதற்கு நீங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய அனுமதியோடும், முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடும் துறை சார்ந்த ஒருசில அறிவிப்புகளை இங்கே நான் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலுரை வழங்கினார்.